# தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம்
## ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மண்டலம்
## காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம்

காரீப் பருவம் 2021-22ல் நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் பணிபுரிய 156 பருவகால பட்டியல் எழுத்தர்கள் மாத ஊதியம் ரூ.5285 + அகவிலைப்படி, 99 பருவகால உதவுபவர்கள் மாத ஊதியம் ரூ.5218 + அகவிலைப்படி மற்றும் 126 பருவகால காவலர்கள் மாத ஊதியம் ரூ.5218 + அகவிலைப்படி என்ற நிலையில் பணிபுரிய தற்காலிக காலி பணியிடங்களுக்காக மண்டல மேலாளர், மண்டல அலுவலகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், பல்லவன் நகர், வந்தவாசி சாலை, காஞ்சிபுரம்-631 501 என்ற முகவரிக்கு 28.02.2022 அன்றைய தேதியில் 18 வயது பூர்த்தி அடைந்த கீழே தெரிவிக்கப்பட்டுள்ள விவரப்படி தகுதி உடைய **காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு** மாவட்டங்களை சேர்ந்தவர்கள் **(ஆண்கள் மட்டும்)** உரிய (1) கல்விச்சான்று, (2) சாதிச்சான்று, (3) வேலை வாய்ப்பு அலுவலக பதிவிற்கான சான்று, (4) மின்னனு குடும்ப அட்டை, (Smart card) (5) இருப்பிடச்சான்று (6) வயது உறுதிச்சான்று மற்றும் (7) ஆதார் அட்டை முன்னாள் இராணுவ வீரராக இருப்பின் அதற்கான சான்று ஆகியவற்றுடன் 2 Passport Size புகைப்படத்துடன் காலை 10.00 மணியளவில் கீழ்காணும் தேதிகளில் நேரில் ஆஜராகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலே தெரிவிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் ஆய்வின் அடிப்படையில் (certificate Verification) தேர்ச்சி பெறுபவர்கள் நிர்ணயிக்கப்படும் மற்றொரு தேதியில் நேர்காணலுக்கு அறிவிப்பாணை மூலம் அழைக்கப்படுவார்கள். நேர்காணலில் தேர்வு செய்யப்படுபவர்களுக்குரிய பணி ஆணை பின்பு தபால் மூலம் அனுப்பப்படும். தேர்வு செய்யப்படும் பணியாளர்கள் பணியின் தேவைக்கேற்பவே பணியமர்த்தப்படுவார்கள் என்பதால் பருவகால பணி முடிந்தவுடன் "வேலையில்லையேல் பணியில்லை" என்ற அடிப்படையில் பணி நீக்கம் / நிறுத்தம் (ousting) செய்யப்படுவார்கள்.

| வ. எண் | பணியின் பெயர் | விண்ணப்பதாரரின் இன வகைகள் | வயது வரம்பு | கல்வி தகுதி | நேரடியாக ஆஜராக வேண்டியநாள் |
|---|---|---|---|---|---|
| 1) | பருவகால பட்டியல் எழுத்தர் | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர் | 37 | அறிவியல் பிரிவில் பிரதான பாடம் தாவரவியல், விலங்கியல், இயற்பியல், வேதியல் மற்றும் கணக்கு | 16.03.2022 |
| | | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) | 34 | | |
| | | இதர வகுப்பினர் | 32 | | |
| 2) | பருவகால உதவுபவர் | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர் | 37 | +2 தேர்ச்சி | 17.03.2022 |
| | | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) | 34 | | |
| | | இதர வகுப்பினர் | 32 | | |
| 3) | பருவகால காவலர் | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர் | 37 | 8-வது தேர்ச்சி அல்லது 10-வது தவறியவர்கள் | 18.03.2022 |
| | | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) | 34 | | |
| | | இதர வகுப்பினர் | 32 | | |

மண்டல மேலாளர்